இளைஞர்களும், தன்னார்வலர்களும் பங்களிப்பை வழங்க வேண்டும்!

ஏரிகளைச் சீரமைத்து வரும் நிமல் ராகவனுக்கு பாராட்டுக்கள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஏப். 3 -

ஏரிகளை சீரமைத்து வரும் நிமல் ராகவனுக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவித்ததுடன் இதுபோன்று நம் இளைஞர்களும், தன்னார்வலர்களும் தத்தமது பகுதிகளில் உள்ள நீர்நிலைகளைச் சீரமைத்திட வேண்டும் என வும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஏரிகளைச் சீரமைத்து வரும் நிமல் ராகவன் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

இளம் வயதிலேயே பொதுச் சிந்தனையுடன் ஏரிகளைச் சீரமைத்து வரும் நிமல் ராகவன் அவர்களுக்குப் பாராட்டுகள்! எடுத்துக்காட்டெனச் செயல்பட்டு இளைஞர்களுக்கு நல்வழிகாட்டும் அவருக்கு வாழ்த்துகள்!

நீர்நிலைகளைத் தூர்வாருதல் – பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் என்பது நீர் மேலாண்மையில் முக்கியமானது. தற்போது கூட நமது அரசின் சார்பில் 2,473 ஏரிகள், 344 அணைக்கட்டுகள், 4,879 கி.மீ வரத்துக் கால்வாய்கள், கால்வாய்கள் / ஆறுகளில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீர்நிலைப் பகுதிகளில் குப்பைகள் மற்றும் கழிவுகளைக் கொட்டுவதைப் பொதுமக்கள் தவிர்த்திட வேண்டும். நமது இளைஞர்களும் – தன்னார்வலர்களும் – சூழலியல் அமைப்புகளும் நிமல் ராகவன் போன்று தத்தமது பகுதிகளில் உள்ள நீர்நிலைகளைச் சீரமைத்திட வேண்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இளையான்குடி – மெய்யனேந்தல் – கிராமத்திற்கு கூடுதல் பேருந்து தேவை!

மானாமதுரை தொகுதிக்கு அரசு கலைக் கல்லூரி அளித்த முதல்வருக்கு நன்றி!

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தில் மானாமதுரை ஆ.தமிழரசி பேச்சு!

சென்னை, ஏப். 3 -

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது மானாமதுரை தொகுதி உறுப்பினர் ஆ.தமிழரசி இளையான்குடி ஒன்றியம், அ.மெய்யனேந்தல் கிராமத்திற்கு கூடுதல் பேருந்து இயக்க வேண்டும் என்று கேட்டதுடன் மானாமதுரை தொகுதிக்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வழங்கிய முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

இளையான்குடி ஒன்றியம், அ. மெய்யனேந்தல் கிராமத்திற்குக் கூடுதலாக பேருந்து இயக்க அரசு முன் வருமா?

இளையான்குடி ஒன்றியம், அ. மெய்யனேந்தல் கிராமத்திற்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், பரமக்குடி கிளை சார்பாக அரசுப் பேருந்துகளும், சிற்றுந்து களும் போதுமான அளவிற்கு இயக்கப்பட்டு வருகின்றன .

ஆ. தமிழரசி: இளையான்குடி ஒன்றியத்திற்குட்பட்ட அ. மெய்யனேந்தல் ஊராட்சியைச் சுற்றி அதிகமான கிராமங்கள் உள்ளன. இப்பகுதி மக்கள் தங்களுடைய அத்தியாவசியத் தேவைக்காகவும், மருத்துவ வசதிக்காகவும், பள்ளிக்கூட வசதிக்காவும், அலுவலகப் பணிக்காகவும் பரமக்குடியிலிருந்து இளையான்குடி வழியாகச் செல்ல வேண்டியிருக்கிறது. பரக்குடி செல்கின்ற அந்த வழித்தடங்களில் மட்டுமே 2 முறை பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அது போதுமான அளவில் இல்லை என்பதால், பரமக்குடி, முள்ளிய னேந்தல், கிருஷ்ணாபுரம், நெடுங்குளம், அதிகரை, லெட்சுமிபுரம், மெய்யனேந்தல், நடுவலசை, கீழாயூர், இளையான்குடி வழியாக 6 நடைகளாவது பேருந்துகளை இயக்க நடவடிக்கை வேண்டும் என்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்: உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மெய்யனேந்தல் கிராமம் இளையான்குடியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் இருக்கிறது. அங்கே பள்ளி மாணவர்கள் பள்ளி செல்வதற்கு வசதியாக காலை 720 மணிக்கும், மாலை 5.50 மணிக்கும் தடம் எண்கள் 15 மற்றும் 37 ஆகிய பேருந்துகள் 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. உறுப்பினர் அவர்கள், இந்த வசதி போதாது என்று தெரிவிக்கின்ற காரணத்தால், இன்னும் கூடுதலாக இரண்டு நடைகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ. தமிழரசி: இரண்டு வழித்தடங்கள் என்பது போதாது. இன்னும் கூடுதலாக இரண்டு வழித்தடங்கள் சேர்த்து பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாட்டுத்தாவணி முக்குடி, பெரியார் நிலையம் மறவனேந்தல், பெரியார் நிலையம்வடுவன்குளம், பெரியார் நிலையம் பாட்டம், மதுரை தூதை, சிவகங்கை மானாமதுரை, சிவகங்கைவாகுடி, விளத்தூர், கட்டிக்குளம் வழியாக பேருந்து கள் இயக்க புதிய வழித்தடங்களை ஏற்படுத்தித் தர வேண்டும் .

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கீழடி நான்குவழிச் சாலையில் ஒரு நிழற்குடை கட்டப்பட்டுள்ளது. மதுரைராமேஸ்வரம் செல்கின்ற அனைத்துப் பேருந்துகளையும் அந்த நிழற்குடை அமைந்துள்ள பேருந்து நிறுத்தத்தில் நிறுத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்..

என்னுடைய மானாமதுரை தொகுதியில் தாயுள்ளம் கொண்ட முதல மைச்சர் அவர்கள், ஓர் அரசு கலைக் கல்லூரி தந்திருக்கிறார்; எங்களுடைய இளந் தலைவர் துணை முதலமைச்சர் அவர்கள், *mini stadium* ஒன்று தந்திருக்கிறார்கள். இதனால், எனது தொகுதி மக்களெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியில் இருக்கிறார்கள். இதற்காக தாயுள்ளம் கொண்ட முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சியில், பழுதடைந்த பேருந்துகளெல்லாம் என்னுடைய தொகுதியைச் சுற்றிலும் இயக்கப்படுகின்றன. அமைச்சர் அவர்கள் அந்த பழுதடைந்த பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று.

அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்: உறுப்பினர் அவர்கள், மதுரையிலிருந்து அவருடைய தொகுதியின் பல்வேறு பகுதி களுக்கு கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள்.

அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, ஏற்கெனவே இயக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பேருந்துகளை நீட்டிப் பதன் மூலமாக அந்த வசதிகளை செய்து தர முடியுமே யானால், அந்த வசதியை செய்து தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோன்று, தமிழர்களின் தொன்மை நாகரிகத்தை உலகிற்கு பறைசாற்றுகின்ற வகையில் நம்முடைய முதலமைச்சர் அவர்களால் கீழடியில் ஏற்படுத்தப்பட்ட அருங்காட்சியகத்தையொட்டி அமைந்துள்ள பேருந்து நிறு த்தத்தில் பேருந்துகளை நிறுத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார். அதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவருடைய தொகுதியில் இயங்குகின்ற பழைய பேருந்துகளை மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். முதலமைச்சர் அவர்கள், இந்தத் துறைக்குப் புத்துயிர் ஊட்டுகின்ற வகையில், தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் புதிய பேருந்துகளை வாங்க அறிவிப்பு கொடுத்து, அதற்கான *tender* விடப்பட்டு, தற்போது தமிழ்நாடு முழுவதும் 3,500 பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. மீதி பேருந்துகள் படிப்படியாகத் தயாரிக்கப்பட்டு, கூடு கட்டும் பணி முடிவு பெற்று வந்துக்கொண்டிருக்கிறது. சமீபத்தில்கூட முதலமைச்சர் அவர்கள் நாகப்பட்டினத்திற்கு வருகை தந்திருந்தபோது 105 பேருந்துகளை அங்கே கொடியசைத்துத் துவக்கி வைத்தார். எனவே, ஒவ்வொரு வாரத்திலும் புதிய, புதிய பேருந்துகள் வந்துக்கொண்டிருக்கின்றன. பழைய பேருந்துகள் அவற்றின் மூலமாக மாற்றி இயக்கப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

சாதாரண மக்களின் மீது பேக்கிங் அரிசி - பசுக்களின்

உணவுக்காக பயன்படுத்தப்படும் தவிட்டிற்கும் சுமத்தியிருக்கும் வரியை நீக்குக!

மக்களவையில் கே.இ.பிரகாஷ் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஏப். 3 -

எங்களது தமிழ்நாடு அரசு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் தமிழ்நாடு அரசு கூட்டுறவு துறையின் மூலமாக வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு 20 கிலோ வரை இலவச அரிசி வழங்கி மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசு 1 கிலோ முதல் 25 கிலோ வரை பேக்கிங் செய்யப்படும் அரசி பைகளுக்கு 5% GST விதித்து ஏழை மக்களின் கஷ்டத்தை ஏந்துகிறது. அதேபோல் தமிழ்நாடு பசுக்களின் உணவான அரிசி ஆலைகளில் தவிடுக்கும் ஒன்றிய அரசு 5% GST வரியை விதித்துள்ளது. GST வரி வசூலில் சுமார் 64 சதவீதம் சாதாரண மக்களிடமிருந்து வருகிறது; 33 சதவீதம் நடுத்தர வர்க்கத்தினரிடமிருந்தும், வெறும் 3 சதவீதம் மட்டுமே பெரும் பணக்காரர்களிடமிருந்தும் வருகிறது. பிரதமர் குஜராத் முதல்வராக இருந்த போது, ஜி.எஸ்.டி. ஒருபோதும் வெற்றிபெற முடியாது என்றும், தேவையான உள் கட்டமைப்பு இல்லாமல் அதை செயல்படுத்துவது சாத்தியமற்றது என்றும் கூறினார்.

மக்களுக்கு பெரும் சுமையை சுமத்திய ஒன்றிய அரசு 5% வரியை விளக்கப்படுமா என்று ஒன்றிய நிதி அமைச்சகத்தை தமிழ்நாடு அரசு சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

சபாநாயகர் அவர்களே, சாதாரண மக்களின் மீது பேக்கிங் அரிசி மற்றும் பசுக்களின் உணவுக்காக பயன்படும் தவிட்டிற்கும் சுமத்தியிருக்கும் 5% gst வரியை விளக்கவேண்டும் என்று மீண்டும் ஒருமுறை தங்கள் மூலமாக ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு கே.இ. பிரகாஷ் வலியுறுத்தினார்.

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் நாட்டார்மங்கலத்தில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார். அருகில் ஆரணி எம்.பி. தரணிவேந்தன் , மயிலம் எம்.எல்.ஏ. சிவக்குமார், ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய செயலாளர்கள் துரை, இளம்வழுதி ஆகியோர் உள்ளனர் .

‘ஜிப்லி’ தொழில்நுட்பத்துடன் கூடிய

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ‘கார்ட்டூன் வைரல்’!

சென்னை, ஏப்.3 -

‘ஜிப்லி’ தொழில்நுட்பத்துடன் கூடிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் “கார்ட்டூன் வைரல்’ ஆகியுள்ளது.

ஜப்பானில் இயங்கும் ‘ஜிப்லி’ஸ்டூடியோ, அனிமேஷன் படங்களை, கைகளால் வரைந்து கதைசொல்லும் முறையை 30 ஆண்டுகளுக்கு முன்பே அறிமுகம் செய்தது.

உலகம் முழுவதும் மிகவும் பாராட்டத்தக்க அனிமேஷன் ஸ்டுடியோக்களில் இதுவும் ஒன்றாக திகழ்கிறது. இந்த ஸ்டுடியோ வடிவமைத்த ஜிப்லி அனிமேஷன் கதைகளில், ‘மை நெய்பர் டோட்டோரோ’, ‘கிகிஸ் டெலிவரி சர்வீஸ்’, ‘போன்யோ’ ஆகிய அனிமேஷன்கள் பல்வேறு சர்வதேச விருதுகளை பெற்றுள்ளன. மேலும், இந்த நிறுவனத்தின் அனிமேஷன் ஜிப்லி கதைகள் ஆஸ்கருக்கும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ஜிப்லி அனிமேஷன் படங்கள் சமூகவலைதளங்களில் திடீரென தற்போது டிரெண்டிங் ஆகிவருகின்றன. செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில் நுட்பத்தின் மூலம் ஒரு புகைப்படத்தை, அச்சு அசலாக ஜிப்லி அனிமேஷன் படங்கள் போல் உருவாக்கி. அதை நெட்டிசன்கள் டிரெண்டிங் செய்து மகிழ்ந்து வருகிறார்கள்.

சமீபத்தில், சினிமா பிரபலங்கள், கிரிக்கெட் பிரபலங்கள் என அனைவரும் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தை பயன்படுத்தி ‘ஜிப்லி’ கதாபாத்திரங்களாகவே தங்கள் புகைப்படத்தை மாற்றி டிரெண்ட். செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில், தமிழ்நாடு அரசின் திறன் மேம்பாட்டு கழகம், நான் முதல்வன் திட்டத்தின் பயனாளிகளுடன், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறந்த நினைவுகளை ஜிப்லி அனிமேஷன் படங்களாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கி உள்ளது. அதை, சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளது.

அந்த வகையில், நான் முதல்வன் பயனாளிகளுடன் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செல்பி எடுத்துக் கொள்வது போலவும், அந்தத் திட்டத்தால் பயன் அடைந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கிக் கவுரவிப்பது போன்றும், அனைவருடனும் குழு புகைப்படம் எடுத்துக் கொள்வதுபோலவும் ஜிப்லி கார்ட்டூன் ஏ.ஐ. புகைப்படத்தை தொழில்நுட்பம் மூலம் உருவாக்கியுள்ளது.

மேலும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நான் முதல்வன் திட்டப் பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்குவது போன்ற புகைப்படத்தையும் ஜிப்லி அனிமேஷன் காட்சியாக உருவாக்கி டிரெண்ட் செய்துள்ளது.

அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

அரியலூர்,ஏப்.3–

அரியலூர் மாவட்ட திமுக சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் ஆண்டிமடம் தெற்கு ஒன்றியம் கூவத்தூர் கிராமம் கலைஞர் திடலில் ஒன்றிய கழக செயலாளர் ஆர்.கலியபெருமாள் தலைமை யில் நடைபெற்றது. முன்னதாக முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் டேவிட் வரவேற்று பேசினார்.

ஒன்றிய துணை செயலாளர்கள் ஆர்.செந்தில்குமார், பொ.கென்னடி, அன்பழகி முத்துகுமரன், ஒன்றிய பொருளாளர் கிரேஷ் சுப்ரமணியன், மாவட்ட பிரதிநிதிகள் பெ.தனசேகரன், இள.சிவமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். நடைபெற்ற பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தலைமைக் கழக பேச்சாளர் புதுக்கோட்டை விஜயா, கழக இளம் பேச்சாளர் மோகன், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கல்லணை காத்தான்

ஏப்ரல் 3 (2005)

தஞ்சை மாவட்டம், கல்லணைக்கு அருகில் பாதிரக்குடி எனும் கிராமத்தில் பிறந்த இவர், தனது இளமைக் காலம் முதல் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், ஆகியோரின் அடியொற்றி, கிளைக் கழகச் செயலாளராகவும், 1974 முதல் 1984 வரை பூதலூர் ஒன்றிய பொருளாளராகவும், 1984 முதல் 2005 வரை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

திருவையாறு நிலவள வங்கி தலைவராகவும், திருக்காட்டுபள்ளி அக்னிஸ்வர ஆலய அறங்காவலர்குழு தலைவராகவும் பதவி வகித்தவர்.

ஈழத்தமிழர் பிரச்சினை, சட்டநகல் எரிப்பு போன்ற போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“கல்லணைக் காத்தான், கழகத்தைக் காத்தான்” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.